அவைக்கு வந்து தெரிவிப்பதற்கு (குறுக்கீடுகள்) இன்றைக்கு 10 மணிக்கே நேரடியாகக் கேள்வி நேரம் இல்லாமல் அவையின் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டி இருப்பதால் அவகாசமில்லை, எனவே நாளை எடுத்துக்கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உடையார் பாளையம் வட்ட மக்களிடம் அதிகாரிகள் கெடுபிடி வசூல் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே.கே. சின்னப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.கே. சின்னப்பன்.

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கடந்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உடையார்பாளையம் வட்டத்திலுள்ள மக்களுக்கு அரசு நிவாரண உதவிகள் உடன் வழங்கவும், நிலவரி, நீர் வரியைத் தள்ளுபடி செய்யவும், கூட்டுறவுக் கடன்களை நீண்ட காலக் கடனாக மாற்றி வழங்கவும் அரசு அறிவித்தும், அதிகாரிகள் கெடுபிடி வசூல் செய்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் திண்டுக்கல்—அண்ணா, தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நீலகிரி, மதுரை, திருச்சி, தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டங்களில் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலவரியைத் தள்ளுபடி செய்யவும், கூட்டுறவுக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது

1994 ஏப்ரல் 19] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்று 5—3—1994 அன்று தஞ்சாவூரில் அறிவித்திருந்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் அறிவிப்பினை ஒட்டி வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு, நீலகிரி, மதுரை, திருச்சி மற்றும் திண்டுக்கல்—அண்ணா மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பயிர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படவில்லை என்பதால் மேற்கண்ட நான்கு மாவட்ட விவசாயிகளுக்கும் நிலவரி தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

2. ஆயினும், வெள்ளம் மற்றும் வறட்சியால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வருகின்ற தமிழக விவசாயிகளின் இன்னல்களை நீக்கும் வகையில், இந்த அரசு 1988 ஆம் ஆண்டு நிலவரி மற்றும் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்வதில் ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை வலியுறுத்தி மீண்டும் 1993 சூன் திங்களில் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் விளைச்சல் 50 விழுக்காடு மற்றும் அதற்குக் குறைவாக இருக்குமேயானால் அந்த நிலங்களின் உரிமை பெற்ற விவசாயிகளுக்கு பயிராய்வு சான்றிதழ் (Annawari certificate) வழங்குமாறு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர்களுக்கும் மாவட்ட ஆட்சியரால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கூட்டுறவு மற்றும் இதர வங்கிகள் மூலம் பெற்ற குறுகிய காலக் கடனை மத்திய கால கடனாக மாற்றிக் கொள்ள இயலும்.

எனவே, சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே.கே. சின்னப்பன் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தினை மறுக்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் வட்டம் என்பது எப்போது புயல் வந்தாலும் பாதிக்கப்படுகிற ஒரு வட்டமாகவும், வறட்சி வந்தாலும் பாதிக்கப்படக்கூடிய ஒரு வட்டமாகவும் கடந்த காலங்களில் இருந்து வந்திருப்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இந்த ஆண்டு புயல் ஒரு முறை மட்டும் தாக்கவில்லை. மூன்று முறை உடையார்பாளையம் வட்டத்தைத் தாக்கியதன் காரணமாக அங்கே இருக்கிற மக்களுக்கு சரியான நிவாரணம் வழங்கப்படாதது குறித்து மாண்புமிகு முதல்வரின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், உடனடியாக அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுப்பி, அந்தப் பகுதியிலுள்ள அனைத்து அரசு அதிகாரிகளையும் அழைத்து அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு உடனடியாக

நிவாரணம் வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதன் அடிப்படையில் அந்தப் பகுதியில் இருக்கிற சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உடனடியாக வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், இந்த அரசையும் பாராட்டுவதோடு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுடைய நீர்வரியை யும், நிலவரியையும் ரத்து செய்ய வேண்டும் என்ற நிலை யில் அங்கே வருவாய்த்துறை ஆணையாளரிடமிருந்து சரி யான அறிக்கை வராததன் காரணமாக அது திருச்சி மாவட் டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளதாக அறிவித்துள்ளார் கள். இருந்தாலும் ஒன்றை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன். அந்தப் பகுதியிலே 15 தினங்கள் நடமாட்டம் இல்லாத அளவுக்கு அங்கே இருக்கிற மரங்கள் எல்லாம் சாய்ந்திருக்கின்றன. இன்னொரு உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னப்பன், உங் களுடைய தொகுதியின் மீது உங்களுக்கு இருக்கிற அக்கறைக் காக மிகுந்த நன்றி. ஆனால் பேரவை விதி 55-ன் கீழ் கொடுத்திருப்பதில் சில விளக்கங்களைக் கேள்வியாகத்தான் கேட்கலாம். உங்களுடைய தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு பலகாலம் உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் இருந்து, கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்பது போல் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள்.

முற்பகல் 10-05

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். எங்களுக்கு எவ்வளவோ வாய்ப்புகள் கொடுக்கப் பட்டிருந்தாலும், நாங்கள் எங்களுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளைப் பற்றி, மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு எங்களுக்கு அனுமதி கிடைக்காததன் காரணமாகத்தான் இன்றைய தினம் ஏதோ சிறிய வாய்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதிலேயே எங்களைப் பேசுவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் கேட் டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்தைக் கேள்வி யாகக் கேட்கவேண்டும்.

1994 ஏப்ரல் 19]

திரு. கே. கே. சின்னப்பன் : உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வனத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியிலே அரசு வன இலாகா, அதாவது முந்திரிக் காடுகள் அதிகமாக இருக்கின்றன. இத்தனை ஆண்டுகளாக அந்தக் காடுகள் எல்லாம் பல கோடிக் கணக்கிலே ஏலம் சென்றன. ஆனால் இந்த ஆண்டு ஏலம் எடுப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால் இன்றைக்கு அரசே அந்த முந்திரிக் காடுகளை சேகரம் செய்கின்ற பணியைச் செய்து வருகிறது என்று சொன்னால் அந்த அளவுக்கு அங்கே முந்திரி மரங்கள் எல்லாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதால் அங்கே இந்த அரசு காடுகளைக் கூட அரசே இன்றைய தினம் எடுத்து சேகரம் செய்கின்ற நிலை இருக்கின்றது. எனவே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் எங்களுடைய உடையார்பாளையம் வட்டத்திற்கு நிர்வாக ஆணையரை அனுப்பி அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய நிலையை அறிந்து எங்கள் பகுதியிலே மிட்டா மிராசுதார்கள் இல்லை, பெரிய பணக்காரர்கள் கிடையாது——அநேகமாக ஒரு ஏக்கர் ஒன்றரை ஏக்கர் நிலம் உடையவர்கள்தான் இருக்கிறார்கள். அநேகமாக நான் அறிந்த அளவில் பார்க்கும்போது, இந்த நிலவரியையும் நீர்வரியையும் ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னால் 26 லட்ச ரூபாயாக இருக்கும் என்று அங்கே அதிகாரிகள் சொல்கிறார்கள். எனவே உடனடியாக அந்த அதிகாரிகளை அனுப்பி அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்த பகுதியில் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் பயன் பெருகின்ற வகையிலே நீர்வரியையும், நில வரியையும் ரத்து செய்து அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் வாங்கி இருக்கின்ற விவசாயக் கடன்களை நீண்டகால கடன்களாக மாற்றிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருப்பது வெள்ளத்தாலும் புயலாலும் பாதிக்கப்படுகிறபோது அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதிலே தாமதம் ஆகிவிட்டது என்றும் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன் உடனடியாக அதிகாரிகள் அங்கே சென்று கவனித்தது மட்டும் அல்ல வெள்ள நிவாரணப் பணிகள் சிறப்பாக நடைபெற்றன முதலமைச்சர் ஆணையிலே என்று சொல்லி அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இதற்காக சட்ட மன்ற உறுப்பினருக்கும் உண்மையை உணர்ந்து நன்றி தெரிவித்ததற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய கோரிக்கையில் இரண்டு கோரிக்கைகள் இருக்கின்றன. ஒரு கோரிக்கை கூட்டுறவுக் கடனை நீண்டகாலக் கடனாக ஆக்க வேண்டும் என்பதற்காக அன்னவாரி

சர்டிபிகேட் திருச்சி மாவட்டம் பூராவும் கொடுக்க வேண்டுமென்று இதற்கு முன்னாலேயே உத்தரவு போடப்பட்டது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன். அடுத்தபடியாக வரி வசூல் பற்றி சொல்கிறபோது சில இடங்களில் அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலை வர்களுடைய அறிக்கைகள் உரிய நேரத்தில் வராததனால் அங்கே சில இடங்களிலே வரி வசூல் செய்கிறார்கள். உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், அதே போல் மற்ற பொதுமக்களும் வெள்ளத்தால் புயலால் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களில் வரி வசூல் செய்யப் படுகிறது என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந் தார்கள். அரசும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று முதலமைச்சரும் அதை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும் என்று சொல் லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய தினம் உடையார் பாளையம் மாவட்டத்தில் மட்டும் அல்ல, அதைப்போல் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த வட்டங்களில் வரி வசூல் செய்கிறார்களோ அந்த வரி வசூல் செய்வதை எல் லாம் நிறுத்த வேண்டுமென்றும் அதற்காக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அதே சமயம் வரிவசூலுக்காக கவுட்டி செய்யக் கூடாது என்ற ஒரு நிறுத்த உத்தரவும் அரசின் சார்பில் போடப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினருக்கு மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்த எந்தப் பகுதி எல்லாம் பாதிக்கப் பட்டிருக்கிறதோ, அங்கே அந்தந்த வட்டாட்சியர் மூலம் அன்னவாரி சர்டிபிகேட் வழங்க உத்தரவிட்டிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் என்னுடைய பகுதி யைப் பொறுத்தவரையில் மேலெழுந்த வாரியாக என்று சொன்னால் திருச்சியிலிருந்து எங்களுடைய பகுதிக்கு வர வேண்டுமென்று சொன்னால் 120 கிலோ மீட்டர் வரும். எங்களுடைய மாவட்ட அமைச்சர் எங்களுடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சருக்குத் தெரியும் திருச்சியிலிருந்து ஜெயங்கொண்டம் வரவேண்டுமென்றால் 4 மணி 6 மணி ஆகும். அதுவும் வந்து .சென்றால் அவர்கள் அன்றைய தினம் மருத்துவரிடம் ஒய்வு பெற வேண்டிய நிலை இருக் கிறது. எனவே என்னுடைய பகுதியில் யாருமே பார்ப்பது கிடையாது. முன்பு கூறியதுபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்து கடுமையாக உத்தரவிட்டதன் காரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் 8 மணி நேரத்திற் குள் அங்கே வந்தவுடன் அங்கே இருந்த அதிகாரிகளை எல்

1994 ஏப்ரல் 19] [திரு. கே, கே. சின்னப்பன்]

லாம் அழைத்து நல்ல முறையில் வெள்ள நிவாரணப் பணி செய்ய உத்தரவிட்டார்கள். அந்தப் பகுதி யிலே இன்னமும்கூட பார்ப்பீர்களேயானால், மரங்கள் விழுந்து அங்கே அப்படியே இருக்கின்றன. முந்திரிக் காடுகள் அனைத்திலும் மரங்கள் விழுந்து இன்னமும் மோசமாக இருக் கின்றன. அவை பட்டுப்போய் இருக்கின்றன. அங்கே இருக் கின்ற விவசாய விளை நிலங்களில் மணல் அடித்திருக்கிறது. அது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதாவது காவிரியிலே, கொள்ளிடத்திலே வருகின்ற தண்ணீர் பூராவும் தங்களுடைய மாவட்டத்தினுடைய கடைசிப் பகுதியாக இருக்கின்ற உடையார்பாளையம் வட் டத்திலேதான், கொள்ளிடத்திற்குத்தான் வந்து சேரவேண்டும். அதனாலே பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மணல் அடித்து இருக்கிறது. இன்றைய தினம் கூட வந்து பார்க்க லாம். எனவே மீண்டும் வருவாய்த் துறை அதிகாரிகளை அனுப்பி எங்களுடைய வட்டத்தைப் பார்வையிட்டு இன்றைய தினம் தமிழகத்தினுடைய முதல்வராக பொறுப்பேற்று இருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஏழையெளிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வளவோ உதவிகள் செய்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே பார்க்கின்றபோது எங்களு டைய வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டம். எனவே மிக அதிகமாக இருக்காது. 26 லட்சம் ரூபாய்தான் அந்த பகுதியிலே நிலவரி. இதிலே என்ன சொல்கின்றேன் என் றால், அவர்களுடைய தஞ்சாவூர் மாவட்டத்தைப் போன்று மிட்டா, மிராசுதார்கள், பெரிய நிலச்சுவான்தார்கள் எங் களுடைய வட்டத்திலே கிடையாது. $1\frac{1}{2}$ ஏக்கருக்கு மேலே அதிகப்படியாகப் போனால் 5 ஏக்கர் உள்ளவர்கள் தான் அங்கே இருக்கின்றார்கள். அவர்கள்தான் இன்றைய தினம் அங்கே நிலச்சுவான்தார்கள் என்று சொல்கின்ற அள வால் இருக்கின்றார்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வியாகக் கேளுங் கள்.

திரு. கே,கே. சின்னப்பன் : எனவே பலபேர்கள் எங் களுடைய தொகுதியிலே இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிடுகின்றவர் கள்தான் இருக்கிறார்கள். வீட்டில் சமையல் செய்கின்ற வர்கள் 65 சதவிகிதம் பேர்கள்தான் இருக்கிறார்கள். அநேகமாக 2 வேளைகள், 3 வேளைகள் சமையல் செய்யக் கூடியவர்கள் 10 சதம் 15 சதம் பேர்கள்தான் இருக்கின் றார்கள். இதை மனதிலே கொண்டு ஏழையெளிய மக்களு

காக உதவுகின்ற இந்த அரசு எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற அவர்களுடைய நிலையைக் கருத்தில் கொண்டு நேரடியாக அதிகாரிகளை அனுப்பி வைத்து மீண்டும் அவர்களுடைய நிலவரியை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று ரத்து செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடையார்பாளையம் தாலுக்காவும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் திருச்சியிலே இருந்து வெகு தூரத்தில் இருந்தாலும், திருச்சியிலே இருக்கின்ற அதிகாரிகள்தான் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. அங்கே வட்டாட்சியாளர்கள் இருக்கின்றார்கள். மற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். அதையும் பார்ப்பார்கள். அது மட்டுமல்ல, அங்கே விழுந்த மரங்கள் எல்லாம் அப்படியே கிடக்கின்றன என்று சொன்னார்கள். விழுந்த மரங்கள் அங்கே அப்படியே கிடப்பதனாலே அங்கே நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்று அர்த்தம். இந்த மரங்களை யாரும் வெட்டிக்கொண்டு போகவில்லை என்பதால் அதற்காக நான் பாராட்டுகிறேன். நல்லவர்கள் இருக்கின்றார்கள் என்பதாலே தஞ்சை மாவட்டத்திலேகூட மிராசுதார்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், மிட்டா மிராசுதார்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே ஏழைகள் அதிகமாக இருப்பார்கள். ஒரு ஆள் இரண்டு ஆள் மிட்டா மிராசுதார்கள் இருப்பார்களானால் பலபேர் நூற்றுக்கணக்கான பேர்கள், ஆயிரக்கணக்கான பேர்கள் ஏழைகளாக இருக்கின்றார்கள். அதாவது மிட்டாதார்கள் இருக்கின்றார்கள் என்றால், 1, 2 பேர்கள் இருந்தால் அங்கே ஆயிரக்கணக்கானவர் ஏழைகளாக இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

அடுத்தபடியாக நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனபது, இன்றைக்கு அது நிறுத்தி வைக்கப்பட்டது. நிலவரியை வசூல் செய்யமாட்டார்கள். அங்கே மட்டுமல்ல தமிழ்நாடு பூராவும் வசூல் செய்ய மாட்டார்கள். அப்படி வரி வசூல் செய்தாலும் அதை அடுத்த வசூலிலே வைத்துக்கொள்வதற்கான ஏற்பாட்டை செய்யும் என்பதையும் நாளை முதல் அல்லது இன்று முதல் உடையார்பாளையம் வட்டத்தில் மட்டுமல்ல திருச்சி மாவட்டத்தில் எங்கேயும் வரி வசூல் செய்ய மாட்டார்கள் என்பதை நான் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.........

1994 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு கேள்விகள் தான்.

திரு. கே.கே. சின்னப்பன் : நன்றி தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குக் கூட வாய்ப்பு இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் பற்றி (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் மிட்டா மிராசுதார்கள் பற்றிதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

(ஆ) மதுரை நகரில் மின் அழுத்தம் குறைந்து அடிக்கடி மின் வெட்டு ஏற்படுவதால் பொது மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. ஓ.எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை நகரில் அடிக்கடி மின் அழுத்தம் குறைந்து, மின்வெட்டு ஏற்படுவதால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

கடந்த 25—3—1994 அன்று பசுமலை துணை மின் நிலையத்திலுள்ள ஒரு 80 எம்.வி.ஏ. 230/110 கே.வி. மின் மாற்றி (Auto Transformer) பழுதடைந்த